செய்தி வெளியீடு எண்: 491 நாள்: 26.07.2018

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 25.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 4 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம், உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகக் கட்டடம் மற்றும் 2 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 11 மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 56 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட மின்னணு முத்திரை பதிப்பு முறை திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 7.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பாரம்பரியமிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்திற்கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், சென்னை, காஞ்சிபுரம், திருப்பூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தஞ்சாவூரில் 2 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகம், 1359 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன், துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம் மற்றும் தணிக்கை) அலுவலகம், 1–எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரியில் 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம் – கூடுவாஞ்சேரி, திருவள்ளூர் மாவட்டம் – மணவாள நகர் ஆகிய இடங்களில் 1 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 4 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வணிவரி மற்றும் பதிவுத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

முத்திரைத் தீர்வையை பொதுமக்கள் செலுத்துவதற்கு ஒரு மாற்று வழியாக மின்னணு முத்திரை பதிப்பு முறை (e-stamping) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனமான Stock Holding Corporation of India Limited (SHCIL) மூலமாக மின்னணு முத்திரை பதிப்பு முறை செயல்படுத்தப்படுகிறது. தற்போது சென்னை மண்டலத்திலுள்ள 63 சார்பதிவாளர் அலுவலகங்களில் மின்னணு முத்திரை பதிப்பு முறை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மின்னணு முத்திரை பதிப்பு முறை திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் விதமாக, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 56 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் விரிவுபடுத்தி துவக்கி வைத்தார்கள். இந்த மின்னணு முத்திரை பதிப்பு முறை மூலம், பொதுமக்கள் சுலபமாக முத்திரைத் தீர்வை செலுத்த வழிவகை ஏற்படுவதுடன், போலி முத்திரைத்தாள் முறைகேடுகளும் தடுக்கப்படும்.

வணிகவரித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 10 டாடா சுமோ ஜீப்புகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 3 ஓட்டுநர்களுக்கு, அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

வணிகவரித் துறையின் சார்பில் இயங்கும் தமிழ்நாடு வணிகர் நல வாரியம், வணிகர்களின் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ உதவி, வணிகர்களின் வாரிசுதாரர்கள் கல்வி பயில கல்வி உதவித் திட்டம், உயிரிழந்த வணிகர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப

நல உதவித் திட்டம், வியாபாரத்தில் நலிவுற்ற வணிகப் பெருமக்களுக்கு நல உதவி போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், உயிரிழந்த தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் 10 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை குடும்ப நல உதவியாகவும், ஒரு உறுப்பினருக்கு இருதய அறுவை சிகிக்கைக்காக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை மருத்துவ உதவியாகவும் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 5 வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு நல உதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் முனைவர் திரு.டி.வி.சோமநாதன், இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**